# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 16 திங்கட்கிழமை 01.09.2025 கதிர் 303







# வடக்கில் கையகப்படுத்தப்பட்ட காணிகள் விடுவிக்கப்படும்!



## ஜனாதிபதி அநுரகுமார வாக்குறுதி

யாழ்ப்பாணம், செப். 01

வடக்கில் கடந்த போரின் போது பாதுகாப்புப் படையினரின் பயன்பாட்டுக்காகக் கையகப்படுத்தப்பட்ட மக்களின் காணிகளில், விடுவிக்கக்கூடிய அனைத்து காணிகளும் விடுவிக்கப்படும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உறுதியளித்தார். .

மீனவ சமூகத்துக்குத் தேவையான வசதிகளை வழங்குவது அரசின் பொறுப்பு என்றும், வடக்கில் மீன்பிடித் துறைமுகத்தை அபிவிருத்தி செய்வதன் மூலம் மீனவ சமூகத்துக்குத் தேவையான வசதிகளை வழங்கவும் அவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்

7➤

# செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் நீதியான விசாரணை முன்னெடுக்கப்படும்

## யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி அநுர உறுதி



யாழ்ப்பாணம், செப். 01

“செம்மணியில் தோண்டப்படும் மனித எச்சங்கள் தொடர்பாக நீதியான விசாரணைகள் முன்னெடுக்கப்படும். இதில் எவ்வித மாற்றமும் இல்லை.” - என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்கு இன்று உத்தி யோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி, மயிலிட்டி மீன்பிடித் துறைமுகத்தை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் மூன்றாம் கட்டத்தை ஆரம்பித்து வைத்தார். இந்த நிகழ் வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

## மயிலிட்டியில் இன்று பொலிஸார் அடாவடி

யாழ்ப்பாணம், செப். 01

மயிலிட்டி மீன்பிடித் துறை முகத்தை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் மூன்றாம் கட்டத்தை ஆரம்பிக்கச் சென்ற ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் கவனத்தை ஈர்க்கும் வகையில் வலிகாமம் வடக்கில்

7➤



## மயிலிட்டி மீன்பிடித் துறைமுகத்தின் 3ஆம் கட்ட அபிவிருத்திப் பணி ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 01

யாழ்ப்பாணம், மயிலிட்டி மீன்பிடித் துறைமுகத்தை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் மூன்றாம் கட்டத்தை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இன்று ஆரம்பித்து வைத்தார்.

இதன் கீழ், வடக்கு மாகாணத்தில் உள்ள மீனவ சமூகம் மாத்திரமன்றி, கிழக்கு மற்றும்

7➤







## குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் யாழ். அலுவலகம் ஜனாதிபதியால் திறப்பு

யாழ்ப்பாணம், செப். 01

யாழ்ப்பாணம் மாவட்ட மக்களின் மக்களின் நீண்டகால குறைபாட்டைப் பூர்த்தி செய்யும் வகையில் குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் யாழ். பிராந்திய அலுவலகத்தை இன்று முற்பகல் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க திறந்து வைத்தார்.

தற்போதைய அரசின் முன்னு ரிமைத் திட்டமாக டிஜிட்டல் மயமாக்கல் செயற்படுத்தப்பட்டுள்ளது எனவும், அடுத்த

7➤

# இந்த அரசாங்கம் நாட்டிற்காக எதையும் செய்யவில்லை!

கொழும்பு,செப்.01இன்றுநம்நாட்டின்நிலைமை சோகமானதும் துரதிர்ஷ்டவசமானதுமாகவே காணப்படுகின்றன. நாட்டு மக்களுக்கு பல எதிர்பார்ப்புகளை வழங்கி, மக்களை ஏமாற்றி, பொய்யால் வெற்றி பெற்று, இன்று நாட்டின் 2.2 மில்லியன்மக்களை விரக்தியில் ஆழ்த்தியுள்ளனர். புற்றுநோய் வைத்தியசாலையில் நிலவும் வசதிகளைக் கூட பெற்றுக் கொடுக்கவோ, மருந்துப்பற்றாக்குறையைத்தீர்க்கவோ முடியாது போயுள்ளது. ஆயிரக்கணக்கான மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறி வருகின்றனர். இதனால் மூளைசாலிகள் வெளியேற்றம் சார் பிரச்சினை எழுகிறது. இதற்கும் எந்த தீர்வும் இல்லை. மேலும், நாட்டின் அபிவிருத்திப் பயணத்தை விரைவுபடுத்த எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. தொலைநோக்குப் பார்வை இல்லாத ஒரு அரசாங்கத்தால் நாடு ஆளப்படுகிறது என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியால் இம்முறை புதிதாக தெரிவான உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பு நேற்று (31) அம்பாறை நகரில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில்அவர்மேலும்தெரிவிக்கையில்,

பொருட்களின் விலைகள் அதிகரித்து, வருமானம் குறைந்து, தொழிற்சாலைகள்



மூடப்பட்டு, மக்கள் நாட்டை விட்டு வெளியேறி வரும் சூழ்நிலையில், நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 50மூ பங்களித்து, சுமார் 4 மில்லியன் மக்களுக்கு வாழ்வாதரத்தைப் பெற்றுத் தரும் நுண், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முனைவோரின் சொத்துக்கள் பராட்டே சட்டத்தின் மூலம் ஏலம் விடப்படுகின்றன.

அரிசியில் தன்னிறைவு பெற்றிருந்த ஒரு நாட்டில், தற்போது அரிசிக்கு நியாயமான விலை கூட இல்லாமல் இறக்குமதி செய்யும் நிலைக்கு நாடு சரிந்துள்ளது. நுகர்வோரைப் பாதுகாக்கிறோம்என்ற போலிக்காரணத்தின் கீழ் மோசடிகள் மேற்கொள்ளப்படுவதே இதற்குக் காரணம்.

இன்று, நெல் விவசாயிகள் முதல் சகல விவசாயத்திலும் ஈடுபட்டுள்ள மக்கள் கைவிடப்பட்டுள்ளனர். விவசாயிகளை கோலோட்சுவோம் எனக் கூறி ஆட்சிக்கு வந்த இந்த வினைதிறனற்ற அரசாங்கம், இன்று விவசாயிகளை நிர்க்கதிக்கு ஆக்கியுள்ளது. இந்த மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளும் நம்பிக்கைகளும் எதிர்பார்ப்புகளும் நிறைவேற்றப்படவில்லை.ஜனாதிபதிபதவியையும், 159 பெரும்பான்மையையும், உள்ளூராட்சி மன்றங்களில் பெரும்பான்மை அதிகாரத்தையும் வைத்துக் கொண்டிருக்கும்.

இந்த அரசாங்கம் நாட்டிற்காக எதையும் செய்யவில்லை. இது தொடர்ந்தால், 2022 ஆம் ஆண்டு போலவே, நாடு கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமல் 2028 ஆம் ஆண்டிலும் மீண்டும் வங்குரோத்து நிலையை எட்டும்.

2028 ஆம் ஆண்டு முதல் 5.5 பில்லியன் டொலர் வருடாந்த வெளிநாட்டுக் கடனை அடைக்க வேண்டுமானால் 2025 ஆம் ஆண்டு முதல் 5மூ பொருளாதார வளர்ச்சி விகிதத்தை பேணிச் செல்ல வேண்டும். புள்ளிவிவரங்களின்படி, இந்த இலக்கை தற்போது அடைய முடியாது. மீண்டும் வங்குரோத்துயடையக் கூடாது என பிரார்த்திக்கின்றேன்.

மக்களின் அழுத்தத்தையும் அதிருப்தியையும் சுரண்டி தனிப்பட்ட அரசியல் ஆதாயங்களைப் பெறுவதற்கு நான் தயார் இல்லை. ஐஆகு உடன் பேச்சுவார்த்தை நடத்தி ஒப்பந்தத்தை திருத்துமாறு அரசாங்கத்திடம் கேட்டுக் கொண்டாலும், புதிய அரசாங்கமாக இந்த அரசாங்கம் அதனைச் செய்யவில்லை. நாட்டு மக்கள் இவற்றை புரிந்து கொள்ள வேண்டும் என தெரிவித்தார். (ஐ)

SUHATHEHAM ATHULARSAALAI (PVT) LTD
சுகதேகம் ஆதுலர்சாலை (பீவீட) எல்டீடி
Neithal Beach city, Navatkuli, Jaffna
Company No- PV0031448

சித்த, ஆயுர்வேத, மேற்கத்ய இணைந்த மருத்துவ சேவை

Opening Hours - 9.00 am - 5.00 pm
Monday - Saturday

Treatment for Following Diseases
- Joint disorders சகல விதமான மூட்டுவாதங்கள்
- Paralysis பாரிசவாதம்
- Skin diseases தோல் நோய்கள்
- obesity உடற்பருமன்
- Gynecological problems - பெண்ணியல் நோய்கள்
- A norectal diseases மூல வருத்தம்
- Diabetic Mellitus நீரிழிவு
- Diabetic foot ulcers - நீரிழிவு புண்கள்
- Vericose vein Kidney stone சிறுநீரககல்
- Hypertension உயர்குருதியமுக்கம்
- cholesterol கொலஸ்திரோல்
- GGIT disorders சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்பான நோய்கள்

இலவச மருத்துவ முகாம்
* போயா தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நடைபெறும்.
* இலவசமாக குருதியமுக்கம் நிறை, உயரம், உடற்திணிவுச்சுட்டி என்பவற்றை அளவிட முடியும்

Special Treatments
- Full body Therapy
- Head Massage
- Foot Massage -
- Herbal Medicated Bath
- Decoction Bath
- Shirod hara
- skin care therapy
- Nasya
- wellness treatment through yoga & counselling
- Leech Therapy

அனைத்து விதமான குழந்தைகளுக்கான மூலிகைத் தாவரங்கள், கோரோசனை மாத்திரைகள், கிரந்தி எண்ணை என்பனவனற்றை இங்கு பெற்றுக்கொள்ளலாம்

Other activities ஏனைய சேவைகள்
Nursery Garden - Medicinal Plants (மூலிகை தாவரங்கள்)
Medicinal leach (லீச் அட்டை வளர்ப்பு)

Neithal Beach city
Amman Kovil Road,
Navatkuli Jafina

Contact No-0762942218

# அரசாங்கம் காத்திரமான ஒரு முடிவை எடுக்க வேண்டும்

மாகாண சபை தேர்தலைகளை நடாத்துவதற்கான எந்தவொரு வேலைத்திட்டமும் இடம்பெறவில்லை என ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் இணைத் தலைவரும் ஈபிஆர் எல்எப் அமைப்பின் தலைவருமான சுரேஸ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

யாழில் நேற்று (31) இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி யாழ்ப்பாணத்திற்கு இன்று (01) வருவதாக செய்திகள் மூலம் அறியக்கூடியதாக இருக்கிறது. கிரிக்கெட் மைதானத்திற்கான அடிக்கல் நாட்டு, மயிலிட்டி துறைமுகத்தை விஸ்தரிப்பதற்கான வேலைத்திட்டங்கள், வட்டுவாகல் பாலத்தை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு போன்ற விடயங்களை செய்ய இருப்பதாக நாங்கள் அறிகின்றோம்.

அபிவிருத்தி பணிகள் ஒருப்பக்கத்தில் வரவேற்கக்கூடிய வகையில் இருந்தாலும் கூட அவரது தேர்தல் விஞ்ஞாபனத்தில் முக்கியமான விடயம் ஒன்று சொல்லப்பட்டு இருந்தது. மாகாண சபை தேர்தலைகளை நடத்துவது தொடர்பாக சொல்லப்பட்டு இருந்தாலும் இன்று வரை




அதை நடாத்துவதற்கான எந்தவொரு வேலைத்திட்டமும் இடம்பெறவில்லை.

செம்மணி புதைகுழி விடயம் என்பது ஒரு இனப்படுகொலையின் அழிக்க முடியாத சாட்சியமாக இருக்கிறது. எந்தவொரு அரசாங்கமும் தனது இராணுவத்தினரை பாதுகாப்பதில் குறியாக உள்ளனர். ஆகவே இவர்கள் ஊடாக உள்நாட்டில் நீதிப் பொறி முறையை ஒன்றை உருவாக்கி நிச்சயமாக நீதியை பெறமுடியாது.

ஆகையால்தான் ஒட்டுமொத்த தமிழ்மக்களும் திரண்டு கையெழுத்து போராட்டம் ஒன்றை நடத்தி சர்வதேச நீதிப் பொறிமுறையை விரும்புகின்றார்கள். ஆகவே ஜனாதிபதி அவர்கள் சர்வதேச நீதிப் பொறிமுறையை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ஜனாதிபதி யாழ். வருகையின் போது முக்கியமாக கவனத்தில்எடுத்துக்கொள்ள வேண்டிய விடயம்பல்வேறுபட்ட காணிகள் இன்றும் முப்படைகள் வசம் இருக்கிறது. காணி விடுவிப்பு என்ற விடயம் கடந்த ஒரு வருடத்தில் எதுவும் நடைபெறவில்லை என்பது தான் உண்மையான விடயம். ஆனால் யாழ்ப்பாணத்திற்கு வருகை தரும் சகல அமைச்சர்களும் காணிகள் விடுவிக்கப்படும் என கூறுகிறார்கள் தவிர காணிகள் விடுவிக்கப்பட வில்லை.

யாழ்ப்பாணத்தில் மாத்திரம் அல்ல முல்லைத்தீவிலும் இதே பிரச்சனை இருக்கிறது. தங்கள் பதவிக்கு வந்தால் உடனடியாக இவற்றை செய்வோம் என உறுதிமொழி கூறி இருக்கிறார்கள். ஆகவே காணி விடுவிப்பு தொடர்பாக அரசாங்கம் காத்திரமான ஒரு முடிவை எடுக்க வேண்டும் என தெரிவித்தார். (ஐ)

## தொடரும் அநுர அரசின் அதிரடி ஆட்டம்! சிக்கப் போகும் எதிர்க்கட்சி தலைவர்



கொழும்பு, செப் .01

எதிர்க்கட்சியின் பிரபலமான தலைவர் ஒருவர் விரைவில் கைது செய்யப்பட உள்ளதாக அநுர அரசின் உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஊழல் வழக்கு தொடர்பாக குறித்த அரசியல்வாதி கைது செய்யப்படவுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

அவர் அமைச்சராக இருந்தபோது, அமைச்சின் ஊழியர்கள் குழுவை தனது தனிப்பட்ட நோக்கங்களுக்காக பயன்படுத்தியதாக அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக ஏற்கனவே நிறைய ஆதாரங்கள் கிடைத்துள்ளதாகவும் அரச தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த சம்பவம் தொடர்பாக ஊழியர்கள் குழுவிடமிருந்து ஏற்கனவே வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதையடுத்து, சம்பவம் தொடர்பாக எதிர்க்கட்சியின்பிரபலமான தலைவரிடமிருந்து வாக்குமூலங்கள் பதிவு செய்யப்படவுள்ளன. மேலும் அமைச்சின் செலவுகள் தொடர்பிலும் அவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, பல்வேறு ஊழல் வழக்குகளுக்காக இந்த ஆண்டு 10 அரசியல்வாதிகள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். அவர்களில் மூன்று பேருக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## கொழும்பில் ஒரு கோடி பெறுமதியான போதைப்பொருளுடன் இருவர் கைது

கொழும்பு, செப் .01

ஒரு கோடி ரூபாய் பெறுமதியான ஹேஷ் போதைப்பொருளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக கல்கிஸ்ஸை குற்ற விசாரணைப் பணியகம் தெரிவித்துள்ளது.

குறித்த சந்தேகநபர்களிடம் இருந்து 01.05 கிலோ கிராம் ஹேஷ் போதைப்பொருள் மற்றும் கடத்தல் மூலம் ஈட்டியதாக சந்தேகிக்கப்படும் 100,000 ரூபாய் பணம் ஆகியவற்றையும் பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

ஆடைத் தொழிற்சாலை நடத்துவதாகக் கூறி ஒருவர் ஹேஷ் போதைப்பொருட்களை கடத்துவதாகக் கல்கிஸ்ஸை குற்ற விசாரணைப் பணியகத்தின் பொறுப்பதிகாரிக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இரத்மலானை பகுதியில் மாதந்தோறும் 30,000 ரூபாய் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொண்ட வீட்டில் இருந்து இந்தக் கடத்தல் முன்னெடுக்கப்பட்டிருந்ததாக ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

அந்த வீட்டைச் சோதனையிட்டபோது, மற்றொரு சந்தேக நபரும் கைது செய்யப்பட்ட அதேநேரம், அலுமாரியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு கிலோகிராம் ஹேஷ் போதைப்பொருளும் கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள், இரத்மலானை பகுதியைச் சேர்ந்தவர்கள் என தெரியவந்துள்ளது. (ஐ)

## பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் ரத்து செய்யப்பட்டால் ஏற்படப்போகும் ஆபத்து

கொழும்பு, செப் .01

பயங்கரவாதத் தடைச் சட்டம் இரத்து செய்யப்பட்டால், அந்தச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள திட்டமிட்ட குற்றவாளிகள் விடுவிக்கப்படும் அபாயம் உள்ளது என சிரேஷ்ட சட்டத்தரணி பிரதீபா மஹாநாம ஹேவா தெரிவித்தார்.



புதிய பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் இந்த மாதத்தில் வரைவு செய்யப்படும் என இதுதொடர்பில் ஆராய்ந்து புதிய சட்டமூலம் தயாரிக்க அமைக்கப்பட்ட குழுவின் தலைவர் அண்மையில் தெரிவித்திருந்த கருத்து தொடர்பில் குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

பயங்கரவாதத் தடைச் சட்டம் ரத்து செய்யப்பட்டால், அந்தச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள திட்டமிட்ட குற்றவாளிகள் விடுவிக்கப்படும் அபாயம் உள்ளது.

அதனால் பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் ரத்து செய்யப்படும் அதே நேரத்தில், திட்டமிடப்பட்ட குற்றச் சட்டத்தையும் முன்னிலைக்கு கொண்டுவர வேண்டும்.

திட்டமிடப்பட்ட குற்றம் மற்றும் போதைப்பொருள் கடத்தலைத் தடுப்பதில் இந்தச் சட்டம் மிகவும் முக்கியமானது என தெரிவித்தார். (ஐ)

## பாதாள உலகக் குழுவினரை பகிரங்கமாகக் கையாள்வது ஆபத்து

*கொழும்பு, செப் .01*

*பாதாள உலகக் குழுவினர் கைது செய்யப்படுவது சிறந்த விடயமாகும். ஆனால் அதனை ஊடகங்களில் பிரசாரங்களை முன்னெடுத்து கொண்டாடப்பட வேண்டிய ஒன்றல்ல என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பிரேம்நாத் சி தொலவத்த தெரிவித்தார்.*

*கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,*

*பாதாள உலகக் குழுக்களுடன் தொடர்புடைய சிலர் கைதுசெய்யப்பட்டு நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.*

*சந்தேகநபர்களை அழைத்து வரும் போது அமைச்சரும் பொலிஸ்மா அதிபரும் எதற்காக விமான நிலையத்துக்குச் செல்கின்றனர்? கேலிக் கூத்து காண்பித்துக் கொண்டிருக்கின்றனர்.*

*யுத்தம் நிறைவடைந்த போது இவர்கள் ஆட்சியில் இருந்திருந்தால் 159 பேரும் நந்திக்கடலுக்குச் சென்று குளித்து நடனமாடியிருப்பர்.*

*கொண்டாடப்பட வேண்டிய விடயங்களை விடுத்து பாதாள உலகக் குழுவினரை கைது செய்வதை கொண்டாடிக் கொண்டிருக்கின்றனர். இவர்கள் கைது செய்யப்பட்மை சிறந்த விடயம். ஆனால் அது இந்தளவுக்கு கொண்டாடப்பட வேண்டியதல்ல.*

*இது மிகவும் சூட்சுமமாக கையாளப்பட வேண்டிய விடயமாகும். விசாரணைகளை முன்னெடுத்த அதிகாரிகளின் முகங்களை ஊடகங்களில் பகிரங்கமாகக் காண்பிக்கின்றனர்.*

*இவ்வாறான நடவடிக்கைகள் எஞ்சியிருக்கும் பாதாள உலகக் குழுக்குழுவினர் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள இலகுவாக இருக்கும்.*

*பாதாள உலகக் குழுக்களை கட்டுப்படுத்துவற்கான நகர்வுகள் இரகசியமானவையாக இருக்க வேண்டும். ஏனையோர் மீது குறை கூறிக் கொண்டிருக்காமல் தமது பொறுப்பினை நிறைவேற்றுமாறு அரசாங்கத்திடம் கேட்டுக் கொள்கின்றோம். என்றார்.* *(ஐ)*

## படையினரையும் பொலிஸாரையும் பழிவாங்கும் அநுர அரசு! நாமல் பகிரங்கம்

கொழும்பு, செப் .01

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் படையினரையும், பொலிஸாரையும் பழிவாங்குகின்றது என சிறிலங்கா பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச குற்றம் சுமத்தியுள்ளார்.

நாவுல புபுலிய என்னும் இடத்தில் இன்று(31) நடைபெற்ற மக்கள் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அத்தோடு, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையவர்களின் தந்தையை தேசிய பட்டியல் வேட்பாளராக அறிவித்த ஜே.வி.பி கட்சி பயங்கரவாதிகளுக்கு பாலூட்டுவதாகத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான செயற்பாடுகள் ஜே.வி.பி கட்சியின் வரலாற்றில்ஓர் அங்கமாகவே அமைந்துள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். தனது கட்சியின் இயலாமையை மூடி மறைக்கும் நோக்கில் அரசாங்கம் படைவீரர்களை வேட்டையாடத் தொடங்கியுள்ளதாகத் தெரிவித்துள்ளார். பயங்கரவாதத்தை இல்லாதொழிப்பதற்கு மேற்கொண்ட அளப்பரிய அர்ப்பணிப்புக்கள் காரணமாகவே இன்று ஜனாதிபதி அநுரகுமார ஜனாதிபதி மாளிகைகள் தமக்கு தேவையில்லை என கூற முடிகின்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குற்றக்கும்பல்களை வெளிநாட்டில் கைது செய்து நாட்டுக்கு அழைத்து வருவதனை வீர செயலாக காண்பித்துக் கொள்ளும் அரசாங்கத்திற்கு படைவீரர்களை படைவீரர்கள் என அழைப்பதற்கு முதுகெலும்பு இல்லை என நாமல் ராஜபக்ச குற்றம் சுமத்தியுள்ளார். (ஐ)

# இது ராஜதந்திரமல்ல, பலவீனம் சீனாவிடம் அடிபணிந்தது மோடி அரசு: காங். கடும் தாக்கு




பிரதமர் மோடி, அதிபர் ஜின்பிங் சந்திப்பை பின்வரும் விஷயங்களைக் கொண்டு மதிப்பிட வேண்டும். ஜீன் 2020ல், கல்வான் பள்ளத்தாக்கில் சீன ஆக்கிரமிப்பால் நமது வீரர்களில் 20 பேர் தங்கள் உயிரைத் தியாகம் செய்தனர். ஆனாலும், சீனா எந்த ஆக்கிரமிப்பும் செய்யவில்லை என மோடி நற்சான்றிதழ் கொடுத்தார். லடாக்கில் சீனா உடனான எல்லையில் முந்தைய நிலையை முழுமையாக மீட்டெடுக்க தவறிய போதிலும், மோடி அரசு சீனா உடன் சமரசத்தை முன்னெடுத்துச் சென்றுள்ளது. இது அவர்களின் ஆக்கிரமிப்பை நியாயப்படுத்துகிறது.

ஆபரேஷன் சிந்தூரின் போது பாகிஸ்தானுக்கு உதவிய சீனா, ஆயுதங்களை கொடுத்தது மட்டுமின்றி உளவுத்தகவல்களையும் பகிர்ந்துள்ளது. இதற்கு பதிலடி கொடுப்பதற்குப் பதிலாக, மோடி அரசு அமைதியாக ஏற்றுக்கொண்டு, இப்போது சீனாவிற்கு வெகுமதி அளித்து வருகிறது.

திபெத்தில் பிரமாண்ட நீர்மின் நிலைய அணையை சீனா கட்டுவதன் மூலம் நமது வடகிழக்கு மாநிலங்கள் கடுமையாக பாதிக்கப்படும். இப்பிரச்னை குறித்து மோடி அரசு ஒரு வார்த்தை கூட பேசவில்லை. மற்ற நாடுகளைப் போல் இல்லாமல் சீன இறக்குமதியாளர்கள் சுதந்திரமாக கட்டுப்பாடின்றி இந்தியாவில் தங்கள் தயாரிப்புகளை குப்பை போல் குவிப்பது மூலம் நமது சிறு, குறு, நடுத்தர நிறுவனங்கள் தொடர்ந்து அழிந்து வருகின்றன. இதுபோன்ற சீன ஆக்கிரமிப்பு மற்றும் கொடுமைப்படுத்துதல் மற்றும் மோடி அரசின் முதுகெலும்பற்ற தன்மை மூலம் இந்திய வெளியுறவுக் கொள்கையின் புதிய இயல்பு வரையறுக்கப்பட வேண்டுமா? நிச்சயம் இது ராஜதந்திரம் அல்ல. பலவீனம். இவ்வாறு அவர் கூறி உள்ளார். (ஐ)

## சிலிண்டர் விலை குறைவு தேநீர் விலை அதிகரிப்பு





சென்னையில் டீ, காபி, பால் விலை உயர்வு, கேஸ் சிலிண்டர் விலை மாற்றம், சுங்கச்சாவடி கட்டணம் உயர்வு, எஸ்பிஐ கார்டு விதி மாற்றம், தபால் துறை சேவை மாற்றம் ஆகியவை செப்டம்பர் மாதம் முதல் அமலுக்கு வந்துள்ளன.

தமிழ்நாட்டில் விக்கிரவாண்டி, சமயபுரம் உள்ளிட்ட 38 சுங்கச்சாவடிகளில் நள்ளிரவு முதல் கட்டணம் உயர்வு அமலுக்கு வந்தது. குறைந்தபட்சமாக 5 ரூபாய் முதல் அதிகபட்சமாக 395 ரூபாய் வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. லாரி, பேருந்துகளுக்கு ஒரு முறை பயணத்திற்கு ஏற்கனவே வசூலிக்கப்பட்ட கட்டணத்தில் 10 ரூபாய் உயர்ந்து 370 ரூபாயாக வசூல் செய்யப்படுகிறது. இந்த சுங்கக்கட்டண உயர்வு வாகன ஓட்டிகள் மற்றும் பொதுமக்கள் இடையே கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

சென்னையில் சமையல் எரிவாயு சிலிண்டர் விலை சற்று குறைந்து, புதிய விலைப்பட்டியல் வெளியாகியுள்ளது. எண்ணெய் நிறுவனங்கள் வெளியிட்டுள்ள அறிவிப்பின்படி, சென்னையில் கடைகளில் பயன்படுத்தப்படும் 19 கிலோ எடை கொண்ட வணிக பயன்பாட்டிற்கான கேஸ் சிலிண்டர் விலை 51 ரூபாய் குறைக்கப்பட்டுள்ளது. அதே சமயம், சென்னையில், வீட்டில் பயன்படுத்தப்படும் சிலிண்டர் விலை எவ்வித மாற்றமும் இன்றி, 868 ரூபாய் 50 காசுக்கு விற்பனை செய்யப்படுகிறது. (ஐ)





## இந்திய வீரர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள் என்னை பிரபலப்படுத்த வேண்டாம்: நடிகர் அஜித் குமார் பேட்டி

தமிழ்ப் படவுலகின் முன்னணி நடிகர் அஜித் குமார், நடிப்பை தாண்டி கார் ரேஸில் அதிக கவனம் செலுத்தி வருகிறார். கடந்த ஒரு வருடமாக துபாய் மற்றும் ஐரோப்பிய நாடுகளில் நடந்த சர்வதேச கார் பந்தயங்களில் பங்கேற்றார். துபாயில் நடந்த கார் ரேசில் 2வது மற்றும் 3வது இடத்தை பிடித்தார். இந்நிலையில், கார் பந்தயத்துக்கு இடையே அஜித் குமார் கொடுக்கும் பேட்டி இணையதளங்களில் வைரலாகும். தற்போது ஜெர்மனியில் நடக்கும் கார் ரேஸில் பங்கேற்றுள்ள அவர், அங்குள்ள ரசிகர்களை சந்தித்தார். அவருடன் இணைந்து செல்பி மற்றும் வீடியோ எடுத்துக்கொண்ட ரசிகர்கள், தங்கள் மகிழ்ச்சியை அவருடன் பகிர்ந்துகொண்டனர்.

அப்போது அவர்களிடம் பேசிய அஜித் குமார், 'கார் ரேஸை பிரபலப்படுத்துங்கள். தயவுசெய்து என்னை பிரபலப்படுத்த வேண்டாம். இங்கு கார் பந்தயத்தில் ஈடுபடும் இந்திய வீரர்களை முன்னிலைப்படுத்துங்கள். இங்குள்ள வீரர்கள் ஒவ்வொருவரும் உடல்ரீதியாகவும், மனரீதியாகவும் மிகவும் கஷ்டப்படுகிறார்கள்.

அவர்களின் சிரமங்கள் நிறையபேருக்கு தெரிவதில்லை. நிச்சயம் ஒருநாள் இந்திய வீரர்களும் பார்முலா ஒன் கார் ரேஸில் சாம்பியன் ஆவார்கள். மோட்டார் ஸ்போர்ட்ஸை பிரபலப்படுத்துங்கள்' என்று கேட்டுக்கொண்டார். அஜித் குமாரின் இந்த பேச்சு வைரலானதை தொடர்ந்து, கார் ரேஸில் அவர் காட்டும் ஈடுபாடு குறித்து ரசிகர்கள் பலர் கமெண்ட் வெளியிட்டு வருகின்றனர். (ஐ)

## அந்நியர் ஆதிக்க எதிர்ப்பின் பெருமைமிகு தமிழ் அடையாளம் பூலித்தேவர்: முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!!

*மாமன்னர் பூலித்தேவனின் 310வது பிறந்தநாளையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மற்றும் ஆளுநர் ஆர்.என்.ரவி அவரது வீரத்தையும், தியாகத்தையும் நினைவுகூர்ந்துள்ளனர். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் எக்ஸ் பதிவில் கூறியதாவது*

*அந்நியர் ஆதிக்க எதிர்ப்பின் பெருமைமிகு தமிழ் அடையாளமான பூலித்தேவர் அவர்களின் பிறந்தநாள்!*

*சிப்பாய்ப் புரட்சிக்கும் நூறாண்டுகளுக்கு முன்பே தமிழ்நிலத்தில் புரட்சி வெடித்துவிட்டது! தென்னகம் அந்நியருக்குப் பட்டா போட்டு தரப்படவில்லை எனப் பறைசாற்றும் விதமாகப் போரிட்டு, இந்திய விடுதலைப் போராட்டத்துக்கான தொடக்கவுரை எழுதிய பூலித்தேவரின் புகழ் போற்றுகிறேன்!. இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.*

*பாரதத் தாயின் வீர மகன் பூலித்தேவரின் பிறந்தநாளில், தேசம் அவருக்கு உளமார மரியாதை செலுத்துகிறது. தொலைநோக்குப் பார்வைமிக்க தலைவர், சாதுர்யமான உத்திவகுப்பாளர் மற்றும் அச்சமற்ற போர்வீரரான அவர் கொடுங்கோல் பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சிக்கு எதிராக உறுதிபட நின்று, பாரத விடுதலைக்கான ஆரம்பகால மற்றும் மிகவும் வலிமையான போராட்டங்களில் ஒன்றை வழிநடத்தினார்.*

*அவரது லட்சியங்கள், தியாகங்கள் மற்றும் மரபுகள், விடுதலை போராட்டத்துக்கு வலுவான அடித்தளமிட்ட இடைவிடாத போராட்டத்தில் மக்களை ஒன்றிணைத்தன. அவை நீடித்த வலிமையின் மூலாதாரமாகத் தொடர்ந்து வலுவான, மீள்தன்மை மற்றும் வளமான வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்குவதற்கான நமது தேசிய உறுதிப்பாட்டை ஊக்குவிக்கின்றன. இவ்வாறு தெரிவித்துள்ளார். (ஐ)*



# இன்றைய உலகில் பெண்



மாதர்கள் மானிடம் தழைக்க, இறைவன் படைத்த உயர்ந்த படைப்பினர் ஆவர். ஞாலத்தின் பொறுமையும், அழுகுக் கோலத்தின் பெருமையும் பெற்ற பெண்களாலே மானிட சமுதாயம் வெற்றி நடை போடுவதை காண முடிகின்றது. உலக சரித்திரத்தில் மனிதர்களின் சுதந்திரம். உரிமைகள் சிறந்த நிலையை கடந்து வந்தமைக்கு பெண்களின் வளர்ச்சியே சான்றாகின்றது. அக்காலத்திலும், இக்காலத்திலும், எக்காலத்திலும் பெருமை சேர்த்த தரப்பினராக பெண்கள் விளங்குகின்றனர் என்றால் அது மிகையாகாது. அரசியலில் சாணக்கியம் பெற்ற பெண்கள், அறிவியலில் ஆதிக்கம் பெற்ற பெண்கள், பொருளியலில் புதுமை படைத்த பெண்கள். இலக்கியத்தில் எழுச்சி பெற்ற பெண்கள், கலைகளின் பொக்கிசமாய் விளங்கும் பெண்கள் என்றெல்லாம் மன மகிழ்ச்சியுடன் நாம் புகழ்ந்தாலும், சவால்களைக் கடந்தே பெண்கள் சாதனை புரிகின்றனர் என்பது நிதர்சனமாகும்.

அன்றைய உலகில் பெண்கள் பொதுவாக உயர்ந்த நிலை பெற்றிருந்தமையை காண முடிகின்றது. தாய்வழிக் கோட்பாட்டு அறிஞர்களின் கருத்துப்படி ஆரம்ப நாகரிக வாழ்க்கையில் பெண்கள் தலைமை தாங்கிய சமுதாயம் பற்றி விளக்கப்பட்டுள்ளது. சான்றாக ராகுல சங்கிருத்தியயன் என்பவரின் "வொல்கா முதல் கங்கை வரை" எனும் நூலில் ஐரோப்பிய நாகரிகம். சிந்து வெளி நாகரிகம் முதலிய நாகரிகங்களில் பெண்கள் குடும்பங்களின் தலைமைத்துவத்தை வழிநடத்தியதாகக் கூறப்பட்டுள்ளது.



சங்ககாலத்தில் பெண்கள் பெருமரியாதையாக நடத்தப்பட்டதாக சான்றுகள் உள்ளன. ஔவையார் முதலிய பெண்பாற் புலவர்களும். அரசியரும் சிறந்த கௌரவத்துடனும், மரியாதையாகவும் வாழ்ந்துள்ளனர். பாரி பெற்றெடுத்த அங்கவை, சங்கவை முதலான மாதர்கள் சமூகத்தில் மாண்பு பெற்றிருந்தனர். புலவர்களில் ஔவையாருக்கு தனிமரியாதை இருந்துள்ளது. அதியமான் நெடுமானஞ்சி எனும் சேரமன்னன் ஔவையாரோடு சேர்ந்து தமிழும் நீண்ட நாள் வாழ்வதற்காக அரிய மருத்துவ குணம் படைத்த மலையில் விளைந்த கருநெல்லிக்கனியை பரிசாக அளித்ததாக இலக்கியம் இயம்புகின்றது. மன்னர்களுக்கிடையே ஔவையார் தூது சென்றதாக புறநானூறு கூறுகின்றது.




சங்ககாலத்தில் பெண்கள் சவால்மிக்க வாழ்க்கை வாழ்ந்தமையையும் சான்றுகள் பல் எடுத்தியம்புகின்றன. உடன்கட்டை ஏறுதல், காளை அடக்குதல் முறையுடனான மணமுறை முதலியவற்றுடன் பரத்தமை தொழிலும் பெண்களுக்கு இழிவையே சுட்டிநிற்கின்றன. பூதப்பாண்டியனின் மனைவி பெருங்கோப் பெண்டீர் உடன்கட்டை ஏறியமை பற்றி புறநானூறு விளக்குவதுடன், பரத்தையரில் சேரிப்பரத்தை. காமப் பரத்தை, காதல் பரத்தை எனும் வகையினர் இருந்ததாகவும் இலக்கியங்கள் விளக்குகின்றன.

இடைக்காலத்தில் பல காரணங்களால் மாதர்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகியது. சமூக. அரசியல், பொருளாதார, அந்நியப் படையெடுப்புக்களால் விளிம்புநிலை பெண்களின் வாழ்க்கை பெரு இன்னல் நிறைந்ததாக மாறியது. சொத்துரிமை, பேச்சுரிமை, கல்வி, தொழில். அடிப்படை மனித உரிமைகளில் பெண்கள் சீரழிவுக்கு ஆளாகினர். சிறுவர் திருமணம், மண விலக்கு, சீதனம், உடைமை மறுப்பு. மறுமண மறுப்பு. சாதிப்பாகுபாடு, பெண்ணடிமைத்தனம் என்றெல்லாம் பெண்கள் பாதிக்கப்பட்டிருந்தனர், இவை ஆணாதிக்கத்தின் நிலையை சுட்டுவதாக அமைந்தன.

சோழர் காலத்தில் பெண்கள் யர்நிலை பெற்றிருந்தமைக்கு இராஜ ராஜ சோழன் தமக்கையாரான குந்தவையின் ஆலோசனையின் பேரில் ஆட்சி நடத்தியமையும், சைவத்தைக் காக்க தஞ்சைப் பெருங்கோவில் போன்ற திருத்தலங்களை அமைத்து அறப்பணி ஆற்றியமையும் தக்க சான்றுகளாம். ஆனால் சோழர்காலத்தில் பெண்கள் அவமரியாதை பெற்றமைக்கு இக்கால ஔவையார் பாடிய "தையல் சொல் கேளேல்" எனும் செய்யுள் அடி சான்றாகின்றது. அத்துடன் பெண்கள் கலைகளின் நிமித்தம் அடிமைகளாக நடத்தப்பட்டமையும் சோழர்கால இலக்கியங்களில் அறியக்கிடக்கின்றது. நடனத்தொழிலுக்குரிய மாதர்கள், கோவிலுக்கு தொண்டாற்றும் குடும்பத்தைச் சேர்ந்த மாதர்கள் என்றெல்லாம் பல வகை அடிமைகளாக பெண்கள் இருந்துள்ளனர்.

இடையில் தோன்றிய பழமொழிகள் பல் பெண்களை இழிவுபடுத்துவதைக்காணலாம். "பெண்புத்தி பின்புத்தி", "அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு?" "பொம்பிள சிரிச்சாப் போச்சு புகையிலை விரிச்ச ஆச்சு" என அவை அமைகின்றன. பெண்களை பாலினத்தின் அடிப்படையில் பாகுபாடு பார்க்கும் நிலையில் கொடுமையானது. இந்தியாவில் பெண் குழந்தைகள் கள்ளிப்பால் கொடுத்து கொல்லப்படும்

(7ஆம் பக்கம் பார்க்க..)



# ஆப்கானிஸ்தான் நிலநடுக்கத்தில் 500 பேர் பலி




கிழக்கு ஆப்கானிஸ்தானில் ஞாயிற்றுக்கிழமை (31) அன்று 6.0 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் ஏற்பட்டதில் 500க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர் மற்றும் சுமார் 1,000க்கும் மேற்பட்டோர் பேர் காயமடைந்தனர் என்று அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

ஆப்கானிஸ்தானில் ஞாயிற்றுக்கிழமை (31) இரவு 11.47 மணிக்கு சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

அந்நாட்டின் நகங்கர் மாகாணம் ஜலாலாபாத்தை மையமாக கொண்டு 8 கிலோ மீட்டர் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 6.0 ஆக பதிவானது. நிலநடுக்கத்தால் வீடுகள், கட்டிடங்கள் அதிர்ந்தன. இரவு மக்கள் உறங்கிக்கொண்டிருந்த நேரத்தில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் பலரும் பதற்றத்துடன் வீடுகளை விட்டு வெளியேறி சாலைகளில் தஞ்சமடைந்தனர். இந்த நிலநடுக்கம் ஏற்பட்ட 20 நிமிடம் கழித்து அதே மாகாணத்தில் மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டது.

இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 4.5 ஆக பதிவானது. அடுத்தடுத்து 2 நிலநடுக்கத்தால் நகங்கர் மாகாணத்தில் மக்கள் அஞ்சமடைந்துள்ளனர்.

இந்த நிலையில், ஆப்கானிஸ்தானில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தால் நூர் குல், சோகி, வாட்பூர், மனோகி மற்றும் சபதரே மாவட்டங்களில் குறைந்தது 500 பேர் பலியானதாகவும், 1000க்கும் மேற்பட்டோர் காயமடைந்ததாகவும் குனார் பேரிடர் மேலாண்மை ஆணையம் தெரிவித்துள்ளது.

ஆழமற்ற நிலநடுக்கங்கள் அதிக சேதத்தை ஏற்படுத்தும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. நிலநடுக்கத்தால் பல வீடுகள் இடிந்து விழுந்துள்ளது. இடிபாடுகளில் சிக்கி உள்ளவர்களை மீட்கும் பணி நடைபெற்று வருகிறது. (ஐ)

## பஹல்காம் தாக்குதலுக்கு ஷாங்காய் அமைப்பு நாடுகள் கடும் கண்டனம்




"பயங்கரவாதத்திற்கு எதிராக இரட்டை நிலைப்பாட்டை ஏற்க முடியாது. பஹல்காமில் நடந்த பயங்கரவாத தாக்குதலை கண்டிக்கிறோம்" என மாநாட்டிற்கு பிறகு ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு (எஸ்சிஓ) கூட்டறிக்கை வெளியிட்டுள்ளது.

சீனாவின் தியான்ஜினில் ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாடு நேற்று துவங்கியது. இது இன்று நிறைவு பெற்றது. இந்த அமைப்பில் இந்தியா, சீனா, கஜகஸ்தான், கிர்கிஸ்தான், ரஷ்யா, பாகிஸ்தான், தஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான், ஈரான், பெலாரஸ் ஆகிய நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன.

இந்த மாநாட்டில் பிரதமர் மோடி, ரஷ்ய அதிபர் புடின், சீன அதிபர் ஜி ஜின்பிங் உள்ளிட்ட உலக நாட்டு தலைவர்கள் பங்கேற்றனர். சீனாவில் நடக்கும் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உச்சி மாநாட்டில் கலந்து கொண்ட நாடுகளின் தலைவர்கள் குழு படம் எடுத்துக் கொண்டனர்.

இந்நிலையில், ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு (எஸ்சிஓ) வெளியிட்டுள்ள அறிக்கை:

பஹல்காம் பயங்கரவாத தாக்குதலை ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் உறுப்பு நாடுகள் கடுமையாக கண்டிக்கின்றன. பயங்கரவாதத்திற்கு எதிராக இரட்டை நிலைப்பாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது.

பயங்கரவாதத்தை அதன் அனைத்து வடிவங்களிலும் உறுப்பு நாடுகள் கடுமையாகக் கண்டிக்கின்றன. பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராட சர்வதேச சமூகத்திற்கு அழைப்பு விடுக்கிறோம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

அதேபோல், ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு உச்சி மாநாட்டில், " பாகிஸ்தானில் நடந்த ஜாபர் எக்ஸ்பிரஸ் தாக்குதல், குஸ்தர் தாக்குதல் மற்றும் காசா பகுதியில் இஸ்ரேல் தொடர்ந்து நடத்தி வரும் ராணுவ தாக்குதலுக்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## இந்தியர்கள் ஆஸி.யில் குடியேறுவதை எதிர்த்து பேரணி: அந்நாட்டு அரசு கடும் கண்டனம்

இந்தியர்கள் ஆஸி.யில் குடியேறுவதை எதிர்த்து பேரணி நடத்துவதற்கு அந்நாட்டு அரசு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. சமூக ஒற்றுமையைக் குலைக்க நினைத்தால் நாட்டில் இடம் இல்லை ஆஸ்திரேலி அமைச்சர் டோனி பக் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இனவெறுப்பு அடிப்படையிலான தீவிர வலதுசாரி நடவடிக்கைக்கு இடமில்லை. வெறுப்புணர்வை பரப்பும் இந்த பேரணிகள் நவீன நாஜிக் குழுக்களால் நடத்தப்படுகிறது. குடியேற்ற எதிர்ப்புப் பேரணிகள் ஏற்க முடியாதவை என்றும் ஆஸி. அமைச்சர் டோனி பக் அறிக்கை வெளியிட்டார்.

சிட்னி, மெல்போர்ன், கான்பெரா உள்பட பல நகரங்களில் நடந்த பேரணியில் ஏராளமானோர் பங்கேற்றனர். 2013லிருந்து 2023க்குள் ஆஸி.யில் குடியேறிய இந்தியர்கள் எண்ணிக்கை 2 மடங்கு அதிகரிப்பு என புகார் எழுந்தது. ஆஸி.யில் குடியேறியவர்களுக் எதிராக நியூநாஜிகள், மக்களை தூண்டி விடுவதாக அரசியல் கட்சிகள் கண்டனம் தெரிவித்துள்ளார (ஐ)



## உக்ரைனை பலிகடாவாக்கும் ஐரோப்பா: அமெரிக்க முன்னாள் அதிகாரி குற்றச்சாட்டு

"அமெரிக்கா - ரஷ்யா இடையேயான உறவு மேம்படுவதை தடுக்க, உக்ரைனை தியாகம் செய்வதற்கு ஐரோப்பிய நாடுகள் தயாராகிவிட்டன," என்று முன்னாள் அமெரிக்க உளவுத்துறை அதிகாரி ஸ்காட் ரிட்டர் தெரிவித்துள்ளார்.

ரஷ்யா மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடான உக்ரைன் இடையே, 2022 முதல் போர் நடந்து வருகிறது. இரு நாடுகள் இடையே அமைதி ஒப்பந்தத்தை ஏற்படுத்த, அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் முயற்சித்து வருகிறார். இதற்காக, ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினை அமெரிக்காவின் அலாஸ்காவில் கடந்த மாதம் சந்தித்து பேசினார்.

இந்த சந்திப்புக்கு அடுத்த நாள், உக்ரைன் அதிபர் வோலோடிமிர் ஜெலன்ஸ்கி ஐரோப்பிய நாடுகளின் தலைவர்களுடன் அதிபர் டிரம்பை வெள்ளை மாளிகையில் சந்தித்தார். உடனடி போர் நிறுத்தத்திற்கு ஆதரவு தெரிவித்த ஜெலன்ஸ்கி, உக்ரைனுக்கு பாதுகாப்பு உத்தரவாதங்களை வழங்க வேண்டும் என கோரினார். அதற்கு டிரம்ப் சம்மதம் தெரி வித்தார்.

இருப்பினும், அமெரிக்க அதிபர் டிரம்ப் ரஷ்யாவுக்கு ஆதரவாக செயல்படுவதாக ஐரோப்பிய நாடான போர்ச்சுக்கல் அதிபர் மார்செலோ ரெபெலோ உள்ளிட்டோர் குற்றஞ்சாட்டி வருகின்றனர் . இந்நிலையில், அமெரிக்க முன்னாள் உளவுத்துறை அதிகாரி ஸ்காட் ரிட்டர் கூறியுள்ளதாவது:

அதிபர் டிரம்ப், ரஷ்யாவுடன் நல்லுறவை ஏற்படுத்துவதற்கு அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் கடும் எதிர்ப்பு உள்ளது. ரஷ்யா - அமெரிக்கா உறவை மேம் படுத்தும் முயற்சிகளை எதிர்க்கும் இந்த மக்கள், அதற்காக உக்ரைனை பலிகடாவாக்க தயாராக உள்ளனர்.

இது உண்மையிலேயே நடக்க உள்ளது. அவர்கள் உக்ரைனின் இளம் மரபணுக்களை அழிக்க உள்ளனர். இதற்காக விரைவில், 18 வயது இளைஞர்களை ரஷ்ய வீரர்களுக்கு எதிராக போரிட களத்திற்கு அனுப்ப உள்ளனர். இவ்வாறு அவர் கூறினார்.

உக்ரைனில் ராணுவத்தில் இணைய தகுதியான வயது, 25 முதல் 60 வயது ஆகும். 'போர் துவங்கியதிலிருந்து ராணுவத்தில் சேர பலரும் கட்டாயப்படுத்தப்படுகின்றனர். 'இதை விரும்பாத இளைஞர்கள், நாட்டை விட்டு தப்பிச் செல்கின்றனர்' என, ரஷ்யாவின் அரசு செய்தி நிறுவனமான டாஸ் தெரிவித்துள்ளது. (ஐ)

## குடிவரவு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆண்டுக்குள் பொதுமக்கள் அரசுடனான அனைத்து பணக்கொடுக்கல் வாங்கல்களையும் இணையவழியில் மேற்கொள்ளும் வசதியை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது எனவும் இந்நிகழ்வில் உரையாற்றும்போது ஜனாதிபதி தெரிவித்தார்.

இவ்வளவு காலமும் கொழும்புக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்த அனைத்து நிர்வாக நடவடிக்கைகளும் தொலை தூர கிராமங்களுக்குப் பரவலாக்கப்பட்டு, அரசு செய்ய வேண்டிய பணிகளை, நெருக்கமாக முன்னெடுப்பதற்கு மக்களுக்கு வாய்ப்பு வழங்கப்படும் எனவும் ஜனாதிபதி உரையாற்றும்போது மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை, யாழ்ப்பாணம் மாவட்ட செயலகக் கட்டடத்தின் 60ஆம் ஆண்டை முன்னிட்டு வெளியிடப்பட்ட தபால் முத்திரை யாழ். மாவட்ட அரச அதிபரால் ஜனாதிபதிக்கு இதன்போது வழங்கிவைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால, இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சர் சுனில் குமார கமகே, கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், பிரதி அமைச்சர்களான உபாலி சமரசிங்க, சுனில் வட்டகல, நாடாளுமன்ற உறுப்பினர்களான க.இளங்குமரன், ஜெ.ரஜீவன், ச.ஸ்ரீபவானந்தராஜா வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், யாழ். மாவட்ட அரச அதிபர் ம.பிரதீபன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## மயிலிட்டி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெற்கு மாகாணங்களில் இருந்து வரும் மீன்பிடி படகுகளுக்கும் நீர், மின்சாரம், எரிபொருள் போன்ற அத்தியாவசிய வசதிகள், குளிர்பதன சேமிப்பு வசதிகள், வலை தயாரிப்பு நிலைய வசதிகள், ஏலவிற்பனை மண்டப வசதிகள் மற்றும் தொடர்பாடல் பரிமாற்ற மைய வசதிகள் என்பனவும் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக இந்த ஆண்டு அரசு 298 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், பொதுமக்கள் பாதுகாப்பு பிரதி அமைச்சர் சுனில் வட்டகல, காணி மற்றும் நீர்ப்பாசன பிரதி அமைச்சர் சுசில் ரணசிங்க மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகம், கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சின் செயலாளர் மற்றும் வடக்கு மாகாண அரச அதிகாரிகள், பாதுகாப்புப் படை பிரதானிகள் மற்றும் பலர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

யாழ். மயிலிட்டி மீன்பிடித் துறைமுகத்தை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் மூன்றாம் கட்டத்தை ஆரம்பித்து வைக்கும் இன்றைய நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைக் கூறினார்.

கடந்த அரசுகள் போரை எதிர்பார்த்து பணியாற்றிய போதிலும், இந்த நாட்டில் மீண்டும் எந்தவிதமான யுத்தமும் ஏற்படாத வகையில் நாட்டில் அமைதியையும் நல்லிணக்கத்தையும் கட்டியெழுப்பத் தற்போதைய அரசு பாடுபடுகின்றது என்றும் ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார்.

நாட்டைச் சுற்றியுள்ள கடல், தீவுகள் மற்றும் காணிகளை மக்களுக்காகப் பாதுகாப்பதில் அரசு உறுதியாக உள்ளது என்றும், அதில் எந்தவிதமான அழுத்தத்துக்கும் இடமளிக்கப்படாது என்றும் ஜனாதிபதி மேலும் குறிப்பிட்டார்.

## மயிலிட்டியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உயர் பாதுகாப்பு வலயத்தினுள் உள்ள காணிகளின் உரிமையாளர்கள் போராட்டத்தை முன்னெடுக்க முயன்ற போது பொலிஸார் அடாவடியில் ஈடுபட்டனர்.

முதியவர்கள், பெண்கள் என வேறுபாடின்றி மிக மோசமான முறையில் அவர்களை அங்கிருந்து பொலிஸார் அப்புறப்படுத்தினர்.

அதேவேளை, இந்தச் சம்பவத்தைச் செய்தியாக்க முயன்ற ஊடகவியலாளர்களையும் பொலிஸார் மிரட்டி தகாத வார்த்தைகளால் பேசி துரத்தியடித்தனர்.

மயிலிட்டி மீன்பிடித் துறைமுகத்தின் மூன்றாம் கட்ட அபிவிருத்திப் பணிகள் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் இன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அதன்போது, கடந்த 35 வருடங்களுக்கு மேலாகத் தமது சொந்த இடங்களில் இருந்து வெளியேறி தற்காலிக இடங்களில் வசிக்கும் மக்கள் தமது காணிகளை விடுவிக்குமாறு கடந்த பல வருடங்களாகக் கோரி வருகின்றனர்.

இந்நிலையில் இன்னமும் காணிகள் விடுவிக்கப்படாமல் உள்ள காணிகளின் உரிமையாளர்கள், ஜனாதிபதியின் கவனத்தை ஈர்க்கும் வகையில் மயிலிட்டிப் பகுதியில் வீதியோரமாக அமைதியான முறையில் கவனவீர்ப்புப் போராட்டத்தை நடத்த முயன்றனர்.

இதையடுத்து அங்கு வந்த பொலிஸார், முதியவர்கள் - பெண்கள் என்ற வேறுபாடுகள் இன்றி, அவர்களை மிக மோசமான வார்த்தைகளால் திட்டி, அவர்களைத் தமது பலத்தைப் பயன்படுத்தி அங்கிருந்து அப்புறப்படுத்தினர்.

பெண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் இன்றி, பெண்களை ஆண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் தள்ளி, தகாத வார்த்தைகளால் பேசி அப்புறப்படுத்தினர்.

இந்தச் சம்பவத்தைச் செய்தியாக்கச் சென்ற ஊடகவியலாளர்களையும் பொலிஸார் அச்சுறுத்தி அங்கிருந்து துரத்தியடித்தனர்.

மக்களின் காணிகள் மக்களுக்கே எனக் கூறி ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, தான் பதவியேற்று ஒரு வருடம் பூர்த்தியாவதை முன்னிட்டு அபிவிருத்திப் பணிகளை ஆரம்பித்து வைக்க வந்த வேளை, எமது காணிகளை விடுவியுங்கள் என அவரின் கவனத்தை ஈர்க்கும் முகமாக நாம் போராட்டத்தை நடத்த முற்பட்ட போது கடந்த கால அரசு போன்றே, பொலிஸார் எம் மீது காட்டுமிராண்டித்தனமாக நடந்து கொண்டுள்ளார்.

மாற்றம் எனக் கூறி ஆட்சிக்கு வந்தவர்கள், தமிழ் மக்கள் விடயத்தில் மாற்றத்தை விரும்பவில்லை என்பதே பொலிஸார் எம்முடன் நடந்து கொண்ட விடயம் சான்று பகிர்கின்றது எனக் காணி உரிமையாளர் ஒருவர் கவலையுடன் தெரிவித்தார்.

# சமன் ஏக்கநாயக்கவிற்கு விடுக்கப்பட்டுள்ள அறிவிப்பு!

முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவை வாக்குமூலம் வழங்குவதற்காக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகுமாறு அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், இன்று குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையாக வேண்டிய அவசியமில்லை என அந்த திணைக்களம் அறிவித்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவை, முன்னாள் ஜனாதிபதியின் பிரித்தானிய விஜயம் தொடர்பான விசாரணைக்கு அமைய வாக்குமூலம் அளிக்க இன்று காலை 9.00 மணிக்கு குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகுமாறு அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் இன்று அவரை முன்னிலையாக வேண்டாம் என அறிவிக்கப்பட்டதாக முன்னாள் ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதியின் பிரித்தானிய விஜயம் தொடர்பான விசாரணைக்கு, சமன் ஏக்கநாயக்க முன்னரே குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ‘செயிரி வாரம்’ திட்டம் இன்று முதல் ஆரம்பம்!

அரச நிறுவனங்களில் குவிந்து கிடக்கும் தேவையற்ற பொருட்களை அகற்றும் பொருட்டு ‘செயிரி வாரம்’ என பெயரிடப்பட்டுள்ள விசேட திட்டத்தை இன்று (01) முதல் செயல்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அரச நிறுவனங்களில் உள்ள அதிகாரிகள் சுதந்திரமாக தமது கடமைகளைச் செய்வதற்கு ஏற்ற சுத்தமான மற்றும் ஆரோக்கியமான சூழலை உருவாக்கும் நோக்கில் இன்று முதல் 4 நாட்களுக்கு இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

இதற்காக பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரால் விசேட சுற்றறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

இந்த சுற்றறிக்கை அனைத்து அமைச்சுகளின் செயலாளர்கள், மாகாண தலைமைச் செயலாளர்கள், திணைக்கள பிரதானிகள், மாவட்டச் செயலாளர்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் சட்டப்பூர்வ சபைகளின் பிரதானிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

‘செயிரி வாரம்’ திட்டமானது “க்ளின் சிறிலங்கா” தேசிய திட்டத்துடன் இணைந்து செயல்படுத்தப்பட உள்ளதுடன், தேவையான மற்றும் தேவையற்ற பொருட்களை அடையாளம் காண்பது மற்றும் தேவையற்ற பொருட்களை அகற்றுவது இதன்போது மேற்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# காணாமல் ஆக்கப்பட்டவர்களின் தகவல்களை சேகரிக்கும் நடவடிக்கை முன்னெடுப்பு!

மட்டக்களப்பு, குருக்கள் மடம் என்ற பகுதியில் 1990 ஆம் ஆண்டு கடத்தி காணாமல் ஆக்கப்பட்டவர்களின் தகவல்களை சேகரிக்கும் நடவடிக்கை, நேற்று (31) காத்தான்குடி முகைதீன் மெதத்தைப் பெரிய ஜும்ஆப் பள்ளிவாயல் மண்டபத்தில் இடம்பெற்றது.

குறித்த இந்த நடவடிக்கையானது குரல்கள் அமைப்பு மற்றும் காத்தான்குடி பள்ளி வாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம் காத்தான்குடி ஜம் இய்யத்துல் உலமா சபை முறைப்பாட்டாளர் அப்துல் மஜீத் அப்துர் ரஊப் ஆகியோரின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

1990ஆம் ஆண்டு ஜூலை மாதம் 12ஆம் திகதி அன்று புனித ஹஜ் கடமையை முடித்துக் கொண்டும், கல்முனை பிரதேசத்தில் வர்த்தக நடவடிக்கைக்காகவும் சென்று காத்தான்குடிக்கு திரும்பி வரும்போது அவர்கள் கடத்தப்பட்டதாக அவர்களின் உறவினர்கள் ஆவணங்களுடன் வந்து தகவல்களை வழங்கினர்.

காத்தான்குடியைச் சேர்ந்த அப்துல் மஜீத் அப்துர் ரஊப் என்பவரினால் செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில், 1990ஆம் ஆண்டு ஜூலை மாதம் 12ஆம் திகதி அன்று புலிகளினால் கடத்தி கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டுள்ளதாக கருதப்படும் மனித புதைகுழியை தோண்டுவதற்கான அனுமதியை கடந்த 25 ஆம் திகதி களுவாஞ்சிக்குடி நீதவான் நீதிமன்ற நீதிபதி வழங்கியிருந்தார். களுவாஞ்சிகுடி நீதவான் நீதிமன்றம் இந்த அனுமதியை வழங்கியதையடுத்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் தகவல்களை சேகரிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது

# இன்றைய உலகில்...

நிலை இன்றும் மதுரை போன்ற பழங் கிராமங்களில் இல்லாமல் இல்லை. இந்தியாவில் மாமியார் கொடுமை, சீதனக் கொடுமை, உத்தரப் பிரதேசத்தில் தலித் இனப் பெண்கள் மீதான பாலியல் கொடுமை என்றெல்லாம் எம்மால் அடுக்கிக் கொண்டே போகுமளவுக்கு பெண்களின் நிலை மோசமாகத்தான் இருக்கின்றது.

இன்றைய நிலையில் பெண்கள் எதிர்நோக்குகின்ற சவால்கள், அவர்கள் அடைந்த சாதனைகள் என்பவற்றை நாம் ஆராய முன்னர் பெண்கள் பெற்றிருந்த இறுக்கமான சூழ்நிலையை எம்மால் விளங்கிக் கொள்ள வேண்டும். இந்திய தேசத்தில் பாரதியார் தோன்றி பெண்ணடிமைக்கு எதிராக பேசும் வரை இந்திய தேசம் பெண்களை கண்டுகொள்ள வில்லை. எரிமலைக் கவிஞரான சுப்பிரமணியப் பாரதியார் பெண்ணடிமையை நீக்குவதைப் பற்றி பல கவிதைகளில் விளக்கியுள் ளார். புதுமைப்பெண், பெண் விடுதலைக் கும்மி, பெண்மை, பாஞ்சாலி சபதம். எனப் பல தரப்பட்ட கவிதைகளில் பெண்ணைப் பற்றிப் பாடியுள்ளார். “நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம் -ஞான நல்லறம் வீர சுதந்திரம் பேணு நற்குடிப் பெண்களின் குணங்களாம்” என்றும் பாரதியார் பாடியதைக் குறிப்பிடலாம். ஆணும் பெண்ணும் நிகராக நடத்தப்பட வேண்டும். கற்பு ஆணுக்கும். பெண்ணுக்கும் பொதுவானது. பெண்ணாக விளங்குவது அன்னை பராசக்தி என்றும் கடவுளின் நிலையைக் கொடுத்து பாரதியார் போற்றியுள்ளமை சிறப்பிற்குரியதாகும்.

எம்ஈழத்திருநாட்டிலும் பெண்பெருமை பேசும் இலக்கியப் படைப்புக்கள் எழுந்துள்ளதை திருகோணமலையைச் சேர்ந்த தி.த சரவணமுத்துப் பிள்ளை எனும் அறிஞர் பாடிய “தத்தை விடுதூது” மூலம் “பெண்ணைக் கூட்டிற் பசுங்கிளி போல் பூட்டி வைத்தார்...” எனும் வரிகளும், வ.அ இராசரெத்தினம் படைத்த ஒரு வெண்மணற் கிராமம் காத்துக்கொண்டிருக்கின்றது எனும் நாவல் வலியுறுத்தும் பெண் கல்வி பற்றிய செய்தியும் உறுதிப்படுத்துகின்றன.

பெண்களை போற்றும் நிலையில் இன்று மகளீர் தினம் அன்னையர் தினம் என பல சிறப்பு தினங்கள் கொண் டாடப் படுகின்றன. பெண்கள் இன்று விண்வெளியில் சாதிப்போராகவும், நோபல் பரிசை வென்றெடுப்போராகவும். உலக நாடுகளின் தலைவர்களாகவும், சட்டத்துறை வல்லுனர்களாகவும், அறிவியல் மேதைகளாகவும் திகழ்வதை காண முடிகின்றது. இந்திய விண்வெளி வீராங்கனைகளான மரணித்த கல்பனா சௌலா எனும் பெண்மணியும். சுனிதா வில்லியம்ஸ் ஆகியோரும், ரஸ்யாவின் வெலன்ரீனா தெரஸ்கோவா எனும் பெண்ணும் விண்வெளியில் சாதித்தமை சிறப்பிற்குரியது. இமய மலையின் சிகரத்தைத் தொட்ட யுங்கொ இசுவசி எனும் யப்பானியப் பெண்ணும், நோபல் பரிசு வென்றெடுத்த மேரி ஹியுரி, அன்னை தெரேசா, கொங்சாங் சூகி போன்றோரும், தற்கால அவுஸ்ரேலியா, நியுசிலாந்து. பங்களாதேஷ். தென்கொரியா. பிறேசில் நாட்டுத் தலைவர்களாக பெண்கள் விளங்கி அரசியலில் சாதித்தமையும், பிரித்தானிய குடியேற்ற நாடுகளில் பெண்களுக்கு வாக்குரிமை பெற்ற தேசமாக எம் நாடு விளங்குவதையும். உலகத்தின் முதல் பெண் பிரதமரான ஸ்ரீ மாவோ பண்டாரநாயக்க எமது நாட்டவர் என்பதும் பெருமைக்குரியது.

எனவே “பெண்கள் நாட்டின் கண்கள்” என்பதற்கிணங்க, பெண்களின் எழுச்சி முழு உலகின் எழுச்சி எனவும், பெண்களின் வீழ்ச்சி முழு உலகின் வீழ்ச்சி எனவும் விளங்கி மானிடர்களாகிய நாம் ஆணையும். பெண்ணையும் சமமாக மதித்து வாழ தலைப்படுவோமாக.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.09.2025 வெளியிடப்பெற்றது.